விழுப்புரம் மாவட்டம், கயத்தூர் கிராமத்தில் ரோந்துப் பணியின்போது உயிரிழந்த

விக்கிரவாண்டி காவல் நிலைய தலைமைக் காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க.'ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 18 -

விழுப்புரம் மாவட்டம், கயத்தூர் கிராமத்தில் பணியின் போது உயிரிழந்த தலைமைக் காவலர் சீனுவாசன் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்துவந்த சீனுவாசன் (வயது 40) த/பெ.சந்திரன் என்பவர் நேற்று (16.3.2025) விடியற்காலை சக காவலர் மஞ்சுநாதன் என்பவருடன் தொரவி கிராமத்தில், விக்கிரவாண்டி - புதுச்சேரி மாநில நெடுஞ்சாலையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகப்படும்படியாக இரு சக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்களில் இரண்டு நபர்களை சக காவலருடன் மடக்கிப்பிடித்து விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

பின்னர் தப்பியோடிய மூன்றாவது நபரை பிடிப்பதற்காக கயத்தூர் கிராமத்தில் தேடிவந்து கயத்தூர் சுடுகாடு அருகே அந்த மூன்றாவது நபரை விரட்டிப் பிடிப்பதற்காக சென்றபோது எதிர்பாராதவிதமாக மயங்கி கீழே விழுந்த தலைமைக் காவலர் சீனுவாசனை சக காவலர் உடனடியாக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் தலைமைக் காவலர் சீனுவாசன் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

தலைமைக் காவலர் சீனுவாசன் அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய பணி எந்நாளும் நினைவுகூறத்தக்கது. அவரது உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

சீனுவாசன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தி னருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பொறியாளர்கள் சங்க கூட்டமைப்பு மாநாடு பெரம்பலூர் ஆத்தூர் சாலையில் உள்ள அன்பு மகாலில் நடைபெற்றது. மாநாட்டில் தலைமை உரை ஆற்றிய போக்குவரத்து துறை அமைச்சர், போக்குவரத்து கழகத்தில் மக்களுக்காக அயராது உழைத்து நற்பணி ஆற்றும் பொறியாளர்களுக்கு அரசு விரைவில்கோரிக்கைகளை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்று மகிழ்வுடன் தெரிவித்துக் கொண்டார். இதில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் மற்றும் போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர்கள் ஆர்.பொன்முடி, குணசேகரன், நேர்முக உதவியாளர் ஞானசம்பந்தம், செல்வகுமார், தலைவர் ரவி, பொருளாளர் சுரேஷ் ஆகியோர் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு

பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர் பொதுக்கூட்டங்கள் - நல உதவிகள்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிவிப்பு!

பெரம்பலூர், மார்ச் 18-

பெரம்பலூர் மாவட்டத்தில் கழகத் தலைவர். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கீழ்க்கண்டவாறு பொதுக்கூட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் நடைபெறுகிறது என மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட விபரப்படி பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், கே.என். அருண்நேரு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் நடைபெறுகிறது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

18.03.2025 வேப்பூர் வடக்கு ஒன்றியம் அகரம்சீகூர்சிவாஜி கிருஷ்ணமூர்த்தி.

19.03.2025 வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம் சைதை.சாதிக்.

25.03.2025 அரும்பாவூர் பேரூர் கரூர். முரளி.

28.03.2025 பூலாம்பாடி பேரூர் சேலம் சுஜாதா.

29.03.2025 குரும்பலூர் பேரூர் புதுக்கோட்டை விஜயா.

30.03.2025 பெரம்பலூர் ஒன்றியம் கந்திலி கரிகாலன்.

31.03.2025 ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம் தோழர். அருள்மொழி.

05.04.2025 பெரம்பலூர் நகரம் சுப.வீரபாண்டியன்.

06.04.2025 வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்

கோவி.செழியன்.

07.04.2025லெப்பைக்குடிக்காடு பேரூர் கவிஞர்.நன்மாறன்.

25.04.2025 வேப்பூர் தெற்கு ஒன்றியம் குன்னம் திண்டுக்கல் ஐ.லியோனி.

பெரம்பலூர் மாவட்டத்தில், கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் நிகழ்ச்சிகள்.

பெரம்பலூர் நகரம்

ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது.

நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அரிசி, துணி மணிகள், சாப்பாடு வழங்குவது,

பெரம்பலூர் ஒன்றியம் நலத்திட்ட உதவிகள் வழங்குவது.

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம் தென்னங்கன்றுகள் வழங்கி, சலவைப்பெட்டி மற்றும் வேஷ்டி, சேலைகள் வழங்குவது.

வேப்பூர் வடக்கு ஒன்றியம் 200 பேருக்கு வேஷ்டி, சேலைகள், அரிசி வழங்குவது.

வேப்பூர் தெற்கு ஒன்றியம் பரவாய்,குன்னம் ஆகிய இடங்களில் உள்ள முதியோர் இல்லங்களில் மதிய உணவு மற்றும் வேஷ்டி, சேலைகள் வழங்குவது.

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம் கை.களத்தூர், நூத்தப்பூர்,

வெங்கலம், அன்னமங்கலம் ஆகிய ஊராட்சிகளில் தூய்மை பணியாளர்கள் 200 பேருக்கு அரிசி மற்றும் வேஷ்டி, சேலைகள் வழங்குவது.

வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம் மண்வெட்டி, கடப்பாறை, தூய்மைப்பணியாளர்களுக்கு வேஷ்டி, சேலைகள், அரிசி வழங்குவது,

பூலாம்பாடி பேரூர் கழகம் தூய்மை பணியாளர்கள் 50 பேருக்கு துணிமணிகள், தலா 5 கிலோ அரிசி வழங்குவது.

குரும்பலூர் பேரூர் 100 பேருக்கு வேஷ்டி, சேலைகள் வழங்குவது.

அரும்பாவூர் பேரூர் அரிசி மற்றும் வேஷ்டி, சேலைகள் வழங்குவது.

மாணவர் அணி கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது.

மகளிர் அணிஆதரவற்ற குழந்தைகளுக்கு மதிய உணவு மற்றும் குழந்தைகளுக்கு புத்தாடைகள் வழங்குவது.

இந்த பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். அந்தந்த ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர் சிறப்பாக நடத்திட வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவேங்கடம் ஏற்பாட்டில் கோபியில் உள்ள அரசு மருத்துவமனையில் உள்ள 200க்கும் மேற்பட்ட உள் நோயாளிகளுக்கு கோபி நகர மன்ற தலைவரும், கோபி நகர செயலாளருமான என்.ஆர்.நாகராஜ் முன்னிலையில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் பால், முட்டை, ரொட்டி, பேரீச்சம் பழம், சாத்துக்குடி, வாழைப்பழம் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை வழங்கினார். நிகழ்வில் மாநில நெசவாளரணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், மாநில விவசாயி இணைச்செயலாளர் கள்ளிப்பட்டி மணி, பெருமாள் சாமி, புகழேந்தி, குமணன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் சையத் நாசிர், வினோத், கார்த்திகேயன், பிரகாஷ், வைத்தீஸ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

டாக்டர் வே. ஆல்பன்

மார்ச் 18 (1999)



கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக ஏழு ஆண்டுகள் பணியாற்றியவர்.

திருவட்டாறு ஒன்றியத் தலைவராகவும் பின்னர் திருவட்டாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடிநிலையின்போது மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

"இனிய இயல்பினர், எவரிடத்தும் பண்புடன் பழகக்கூடிய மனப்பக்குவமுடையவர்" எனத் தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

நெல்லை மண்ணின் இலக்கிய முகங்களில் ஒருவர்! எழுத்தாளர் நாறும்பூநாதன் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச்.18-

நெல்லை மண்ணின் இலக்கிய முகங்களில் ஒருவராக விளங்கிய எழுத்தாளர் நாறும்பூநாதன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

எழுத்தாளரும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின் மாநில நிர்வாகியுமான நாறும்பூநாதன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

நாறும்பூநாதன் அவர்கள் நெல்லை வட்டாரத்தை மையப்படுத்திய தனது இலக்கியப் படைப்புகளாலும், சமூகச் செயற்பாடுகளாலும் நன்கு அறியப்பட்ட முற்போக்கு இயக்க எழுத்தாளராக விளங்கியவர் ஆவார். நமது அரசு நடத்தும் பொருநை இலக்கியத் திருவிழாவிலும் அவர் மிக முக்கியப் பங்காற்றினார் என்பதை நன்றியோடு இவ் வேளையில் நினைவு கூர்கிறேன்.

நாறும்பூநாதன் அவர்களது இலக்கியப் பங்களிப்புகள், சமூகச் செயற்பாடுகள், பள்ளி மாணவர்களிடையே இலக்கிய ஆர்வத்தைத் தூண்டுவதற்கான அவரது முன்னெடுப்புகள் ஆகிய தமிழ்ப் பணிகளைப் பாராட்டி 2022ஆம் ஆண்டுக்கான உ.வே.சா. விருதினை நமது அரசின் சார்பில் வழங்கியிருந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

நெல்லை மண்ணின் இலக்கிய முகங்களில் ஒருவரான எழுத்தாளர் நாறும்பூநாதன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், அரசியல் - இலக்கியத் துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள். தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம்! கொளக்காநத்தம் கிராமத்தில்,

அமைச்சர் சா.சி.சிவசங்கர் அமைத்த கலைஞர் கணினி இலவச பயிற்சி மையம்!

ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி திறந்து வைத்தார்!

பெரம்பலூர், மார்ச் 18 -

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், கொளக்காநத்தத்தில் தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், கலைஞர் கணினி பயிற்சி மையத்தை ஒன்றிய செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி நேற்று திறந்து வைத்தார்.

விழாவிற்கு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமை வகித்தார். மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கலைஞர் கணினி பயிற்சி வகுப்பை ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் என். கிருஷ்ண மூர்த்தி ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்து மாணவர்களுடன் உரையாடினார். கலைஞர் கணினி பயிற்சி மையத்தில் 3 மாத கால பயிற்சிகள் மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படும்.

இதில், +2 தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் தேர்ச்சி பெறாதவர்கள் பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாம். காலை 9:30 மணி முதல் 12.30 மணி வரை பெண்களுக்கும், மாலை 5.30 மணி முதல் இரவு 8.30 வரை ஆண்களுக்கும் இலவசமாக பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் தி.மதியழகன், சி.ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய குழுத்தலைவர் முத்துக்கண்ணு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர். சிவசங்கர், வ.சுப்ரமணியன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் எம்.சுந்தரராசு, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் என்.ராகவன், பாலமுருகன், அகிலா ராமசாமி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் இளவரசு, அட்மா திட்ட தலைவர் ராமராஜ், ஒன்றிய நிர்வாகி சக்திவேல், இளைஞரணி பிரபு, மாவட்ட, ஒன்றிய, திமுக கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ம.சுப்பராயன் வரவேற்புரை!

ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மயிலாடுதுறை சீர்காழியில் பொதுக்கூட்டம்!

ஆர்.டி.சபாபதிமோகன் - நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை! எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, மார்ச் 18-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர தி.மு.க. சார்பில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்! பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் எஸ். என்.கே.பாபு, தலைமை தாங்கினார். மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் இரா.காழிகலைவாணன், கழக நிர்வாகிகள் வை.க. மணி, இரா.காழிகலைவாணன், ஏ.குகன், ஆர். எம்.முத்து, ஏ.மகாராஜான், ஏ. சிவப்பிரியாதுரை, சி.சங்கர், ஏ.பி.எஸ்.காஸ்கர், எஸ். துரை, கோ.சட்டநாதன், ஜெயந்திபாபு, வி. சித்தார்த்தன், தனம் ஜி.நாகராஜன், எஸ். அண்ணா, எஸ்.குமரகுரு, எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஜி. முருகேசன், ஏ.ராதிகா, முத்துகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், வரவேற்றார். கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் ஆர்.டி.சபாபதிமோகன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம். ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, முத்து, மகேந்திரன், மாவட்ட அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா அலெக்சாண்டர், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.கென்னடி, சுபாநெடுஞ்செழியன், நத்தம் வின்சென்ட், பி.சிவதாஸ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சு.குமார், செல்லசேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், ப.முருகமணி,

ஞான இமையநாதன், பி.எம்.அன்பழகன், எம்.அத்துல்மாலிக், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் செயலளார் எம். அன்புச்செழியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது எம்.எஸ். முத்துகுபேரன்,

வி.எஸ். பிரபாகர், டி. ராஜ்குமார், வி.எஸ்.என். செந்தில், வெடி பாலமுருகன், இரா.முருகன், காளி தேசப்பன், இரா.தன்ராஜ், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் தியா விஜயேஸ்வரன், பாரூக், இராம. செல்வமுத்துகுமார், தனவள்ளி, ஸ்ரீராம், அம்பலவாணன், தென்றல்அருள், அமுல்ராஜ், செந்தில், எஸ். ராமு, பி.எஸ்.ஆர்.விஜயகுமார், முத்துகுமரன், இளையராஜா, என்.பாஸ்கரன், ஏ.ஜி. எஸ்.பாடியன், மோகன அருண்குமரன் வி.பாலகிருஷ்ணன், சின்னப்பன், பெரியசாமி, வி.என்.ஜீவராஜ், ஆர்.நாகராஜன், முத்துகுமார், ஏ.பி.குலோத்துங்கன், லெட்சுமிபாலமுருகன், என். இளங்கோவன், எஸ்.கே. ராஜா, எஸ்.ஏ.திருச்செல்வம் நகர வர்தத்சு அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஆர்.இந்தரஜித், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் நகர வர்த்தக அணி அமைப்பாளர் எஸ்.எஸ். ஆர்.இந்திரஜித் நன்றி கூறினார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, தஞ்சாவூர் வடக்கு மாவட்ட நெசவாளர் அணி சார்பில், கும்பகோணத்தில் உள்ள அரசு முதியவர்கள், ஆதரவற்றவர்கள் இல்லத்தில் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட அமைப்பாளர் டி.ஆர்.அனந்தராமன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கும்பகோணம் மாநகர செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன் பங்கேற்று ஆதரவற்றோருக்கு உணவு பரிமாறினார். தொடர்ந்து தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் துணை அமைப்பாளர்கள், மாநகர நிர்வாகிகள் வாசுதேவன், ப்ரியம் சசிதரன், சிவானந்தம், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.